23rd January 1965]

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) கன்னியாகுமாரி மாவட்டத்தில் 1964-ம் ஆண்டுவரை 2,308 ஏக்கரா பரப்புள்ள நிலத்தில் அரசாங்கம் ரப்பர் பயிரிட்டிருக்கிறது.

(இ) 1963-64ம் ஆண்டுவரை ஏற்பட்ட செலவு ரூபாய் 33,01,994.

கூட்டுறவு இலாகா துணை ரிஜிஸ்திரார்கள்

*108. **கேள்வி—திரு. சி. ம. அம்பிகாபதி:** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கூட்டுறவு இலாக்காவில் துணை ரிஜிஸ்திரார் பதவிகளை நிரப்புவதில் எத்தனை சதவீதம் பதவி உயர்வு பெறுபவர்களுக்கு ஒதுக்கப்படுகிறது?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: கூட்டுறவுச் சங்க துணைப் பதிவாளர் நிலையான பதவிகளிலும் தற்காலிகப் பதவிகளிலும் சேர்ந்து 25 சதவீதம் நேரடி நியமனங்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், இதர துறைகளுக்கும் பணியாற்ற அனுப்பி வைக்கப்படுகிற சிறப்புத் துணைப் பதிவாளர் பதவிகளில் 50 சதவீதமும் அடங்கும். இப் பதவிகள் நீடிக்குமெனவும் கருதுகிறோம். இப்பதவிகளில் எஞ்சிய 75 சதவீத காலிஇடங்கள் கூட்டுறவு சப்-ரிஜிஸ்திரார்களுக்குப் பதவி உயர்வு கொடுப்பதன்மூலம் நிரப்பப்படுகின்றன.

New Court buildings at Madurai

*109 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether a suitable site at Madurai city or its surroundings has been selected for locating the proposed new Court buildings; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR :—

(*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. வை. சங்கரன்: ஏற்கனவே இங்கு இரண்டு ஜில்லாக்களுடைய கோர்ட்டுகள் வைக்கப்பட்டிருப்பதிலே இட நெரிசல் ஏற்பட்டிருக்கிறது. தவிர, 350 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டடமாக இருப்பதால், பல விரிசல்கள், இடிபாடுகள் காணப்படுகின்றன. ஆகவே, சீக்கிரத்திலே இடம் மாற்றுவதற்கு இடம் பார்த்து வேறு கட்டடம் கட்டும் உத்தேசம் உண்டா? இது சம்பந்தமாக ஏற்கனவே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன நிலைமையில் இருக்கின்றன?

[23rd January 1965

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் : இது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு, 1966-67-ல் அது பற்றி கவனிப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. வை. சங்கரன் : இது மிகவும் அவசர தேவையாக இருப்பதினல், தேசீய நெருக்கடி என்று காரணம் காட்டாமல், அத்தியாவசியமான வேலே என்று உடனடியாக எடுப்பதற்கு சர்க்கார் உத்தேசிக்குமா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் : தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டு, போர்டிலிருந்து சில விஷயங்களேக் கேட்டிருக்கிறேம். தகவல் வந்த பிறகு அதை ஏற்பாடு செய்வோம்.

Gramasevaks

* 110 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the details of avenues for promotion reserved for Gramasevaks in the different branches of Panchayat Administration ; and

(*b*) the principles laid down in this regard?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) II-ம் பிரிவு கிராம சேவக்குகள், I-ம் பிரிவு கிராம சேவக்கு பதவிக்கு உயர்த்தப்படுகின்றனர். கல்வி வளர்ச்சி அதிகாரிகளாகவும், பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரிகளாகவும், -ம் பிரிவு நகரப் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகளாகவும், I-ம் பிரிவு கிராம சேவக்குகள் பதவி மாற்றம் மூலம் நியமிக்கப்படத் தகுதி பெறுவர்.

(இ) I-ம் பிரிவு கிராம சேவக்குகளுக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள 'துறைத் தேர்வுகளில்' (Departmental Test) தேர்ச்சி பெற்றவர்களிலிருந்து அப் பதவிக்கு நியமனங்கள் செய்யப்படும்.

பதவி மாற்றம் மூலம் கல்வி வளர்ச்சி அதிகாரியாக நியமிக்கப்படவேண்டுமானல், I-ம் பிரிவு கிராம சேவக் (ஊழியப்) பொது விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச பொதுக் கல்வித் தகுதிகளேப் பெற்றிருக்க வேண்டும்.

பதவி மாற்றம் மூலம் பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரியாக நியமிகப்பட வேண்டுமானல், I-ம் பிரிவு கிராம சேவக், " பஞ்சாயத்து வளர்ச்சிக் கணக்குகள் " " பஞ்சாயத்து வளர்ச்சி " ஆகிய துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறவேண்டும்.

இத்துடன் இந்த விஷயங்கள் அனைத்திலும் கிராம சேவக்குகளின் தகுதியும் திறமையும் கவனிக்கப்படுகின்றன. தகுதியும் திறமையும் தோராயமாகச் சமமாயிருக்கும்போதுதான், அவர்களின் சீனியாரிட்டி கவனிக்கப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கிராம சேவக்குகளில் எத்தனை சதவிகிதம் முதல் பிரிவினராகவும், இரண்டாவது பிரிவினராகவும் பிரிக்கப்பட்டிருக்கிறது?